



மதுரை வடக்கு மாவட்டம் கிழக்கு தொகுதி சார்பாக ஓரணியில் ஒன்று சேர்வோம் உறுப்பினர் சேர்த்தல் சிறப்பு முகாம் பி எல் ஏ 2 பிஎல்ஏ c உறுப்பினர்கள் பங்கேற்ற சிறப்பு கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் தேர்தல் பணி குறித்து சிறப்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வடிவேல் முருகன், தலைமை கழக வழக்கறிஞர் கலாநிதி தொகுதி பொறுப்பாளர் செல்வகுமார் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அண்ணாமலை மற்றும் கழக நிர்வாகிகள் கழகத்தினர் பாக முகவர்கள் டிஜிட்டல் பூத் ஏஜென்ட்கள் பங்கேற்றனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அருந்ததியர் சமுதாய மக்களுக்கு வழங்கிய 3 சதவிகித இட உள் ஒதுக்கீடு வாழ்வாதாரத்தை காப்பாற்றி வருகிறது என்றும், அருந்ததியர் சமுதாய மக்களின் கோரிக்கைள் உடனடியாக செய்து கொடுக்கப்படும் என்று இந்திரா நகரில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி அளித்தார். அருகில்கோட்டாட்சியர் சக்திவேல். கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் குருமூர்த்தி, தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, பொருளாளர் சத்தியமூர்த்தி ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பிள்ளையார் நத்தம் முருகேசன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க.

## பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் பாகநிலை முகவர்கள் (BLA 2) பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அறிவிப்பு!



கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் - துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை முகாமில் படிவத்தில் நிரப்பப்படும் விவரங்களை பிரத்தியேகமாக செயலியில் (APP) உள்ளீடு செய்யப்பட வேண்டியது குறித்து விருதுநகர் தெற்கு மாவட்டத்தில் உள்ள அருப்புக்கோட்டை, சாத்தூர், திருவில்லிபுத்தூர், இராஜபாளையம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒன்றிய / நகர / பேரூர் கழகங்களில் இன்று (29.06.2025 - ஞாயிற்றுக்கிழமை) கீழ்க்கண்ட பட்டியலில் உள்ளவாறு பயிற்சி கூட்டங்கள் நடைபெற உள்ளது. இக்கூட்டங்களை ஒன்றிய / நகர / பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் முன்னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக்கழக தொகுதி பொறுப்பாளர்கள், தேர்தல் ஒருங்கிணைப்பு குழு ஒருங்கிணைப்பாளர்கள், ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

| தேதி | தொகுதி | இடம் |
|---|---|---|
| 29.06.2025 ஞாயிறு காலை 10 மணி | அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதி | வேல்ராஜன் மண்டபம், அருப்புக்கோட்டை |
| 29.06.2025 ஞாயிறு பகல் 11 மணி | சாத்தூர் சட்டமன்றத் தொகுதி | வெங்கடேஸ்வரா பேலஸ், சாத்தூர் |
| 29.06.2025 ஞாயிறு மாலை 4 மணி | திருவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம் | கந்தசாமி - அழகம்மாள் மண்டபம் தம்பிபட்டி |
| 29.06.2025 ஞாயிறு மாலை 5 மணி | திருவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதி திருவில்லிபுத்தூர் ஒன்றியம் திருவில்லிபுத்தூர் நகரம் | லட்சுமி நாராயணா மண்டபம்,இந்திராநகர் திருவில்லிபுத்தூர் |
| 29.06.2025 ஞாயிறு மாலை 6 மணி | இராஜபாளையம் சட்டமன்றத் தொகுதி | J.S.A.மண்டபம் ஞாயிறு மாலை 06.00 |

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**
செயலாளர்
விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க.




மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை செயல் விளக்க கூட்டத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் மா.ஒச்சுபாலு, கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.ஜெயராம்,தொகுதி பொறுப்பாளர்கள் வி.பி.ராஜன், தேனி ஜெயக்குமார், மாவட்ட நிர்வாகிகள் மூவேந்திரன், ராகவன், மாநில தீர்மானக் குழு அக்ரி கணேசன், மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சௌந்தரராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், வாக்குச்சாவடி பாக முகவர்கள், டிஜிட்டல் பூத் ஏஜென்ட்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்,

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் -

# மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் !

### மாவட்டச் செயலாளர்- மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

*கன்னியாகுமரி, ஜூன் 29-*

*கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் (27.06.2025 - வெள்ளிக்கிழமை) அன்று மாலை 6.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.*

*நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஓரணியில் தமிழ்நாடு என்கிற உறுப்பினர் சேர்க்கை தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டது. மேலும் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்ப படிவங்களை மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்களிடம் வழங்கி உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் கழக அரசின் நான்காண்டு சாதனைகளை மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும் என கூறப்பட்டது.*

*கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தொகுதி பார்வையாளர்கள் ஆனந்த், ரீதர் ரொட்ரிகோ, விஜயகதிரவன், ஒன்றிய கழக செயலாளர்கள் பா.பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குரு கண்ணன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ச.சுந்தர் சிங், நகர கழக செயலாளர்கள் என்.நாகூர்கான், குமரி ஸ்டீபன், பகுதி கழக செயலாளர்கள் இ.ஜவகர், த.ஜீவா, எம்.சேக்மீரான் மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.*

*கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க 30 சதவீதம் புதிய உறுப்பினர்களை அந்தந்த பகுதியில் சேர்க்கும் போது கழக அரசின் 4 ஆண்டு சாதனைகளை மக்களிடம் விளக்கி கூறி கழக கொடியை ஏந்தி திண்ணை பிரச்சாரமாக மேற்கொண்டு நாம் உறுப்பினர்களை சேர்த்திட வேண்டும். கழக தலைவர் தளபதியார் அவர்கள் விரும்பிய 200 தொகுதிகளுக்கு மேலாக நாம் வெற்றி பெற பாடுபட வேண்டும். கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில் 3 சட்டமன்ற தொகுதிகளில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற இன்றே அயராது பாடுபட வேண்டும். நமது உறுப்பினர் சேர்க்கும் பணியை குறிப்பிட்ட காலத்தில் சேர்த்து தலைமை கழகத்தில் ஒப்படைக்க வேண்டும். திட்டமிட்டு பணியாற்றினால் 30 சதவீதம் புதிய உறுப்பினர்களை உடனடியாக சேர்க்க முடியும். இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.*

*தலைமைக் கழக அறிவுறுத்தலின்படி வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்களுக்கான (BDA) பயிற்சி முகாம் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதியில் 310 பேருக்கும், நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் 275 பேருக்கும், குளச்சல் சட்டமன்ற தொகுதியில் 300 பேருக்கும் ஆக மொத்தம் 885 நபர்களுக்கு 29.06.2025, ஞாயிறு அன்று பயிற்சி வழங்க வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.*

## தென்காசி வடக்கு மாவட்டம்

# வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்டம், வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் கோ.பூசைப்பாண்டியன் அவர்கள், தனது உடல்நிலை காரணமாக முழு ஈடுபாட்டுடன் கழகப் பணியாற்ற முடியாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக, **டி.எம்.எஸ். அன்புக்கரசு** (7/53ஏ, மேலத் தெரு, வடமலாபுரம், தென்காசி மாவட்டம்.) அவர்கள் வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றியக் கழகப்பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**" அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் : 28.06.2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## தென்காசி வடக்கு மாவட்டம்

# மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியம், சேர்ந்தமரம் கஸ்பா ஊராட்சி சேர்ந்தமரம் மேற்கு, சேர்ந்தமரம் கிழக்கு, சேர்ந்தமரம் தெற்கு கிளைக் கழகங்களுக்குட்பட்ட பாக எண்கள். மற்றும் கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தென்காசி வடக்கு மாவட்டம், மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட சேர்ந்தமரம் கஸ்பா ஊராட்சியில் உள்ள **சேர்ந்தமரம் கிளைக் கழகம் சேர்ந்தமரம் மேற்கு, சேர்ந்தமரம் கிழக்கு, சேர்ந்தமரம் தெற்குஆகிய 3 கிளைகளாக** பிரிக்கப்பட்டு பின்வரும் வாக்குச் சாவடி பாக எண்கள் கொண்டதாக அமையும்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட கிளைகளுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**சேர்ந்த மரம் மேற்கு கிளை :** 80, 83, 84 ஆகிய 3 வாக்குச் சாவடி பாக எண்கள்.

**சேர்ந்த மரம் கிழக்கு கிளை :** 81, 82, ஆகிய 2 வாக்குச் சாவடி பாக எண்கள்.

**சேர்ந்த மரம் தெற்கு கிளை :** வாக்குச் சாவடி பாக எண். 79

**கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **சேர்ந்தமரம் மேற்கு, சேர்ந்தமரம் கிழக்கு, சேர்ந்தமரம் தெற்கு** ஆகிய கிளைக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சேர்ந்த மரம் மேற்கு கிளை :**
பொறுப்பாளர் : பி. முருகன், பால்பண்ணை தெரு, சேர்ந்தமரம்-627 857.

**சேர்ந்த மரம் கிழக்கு கிளை :**
பொறுப்பாளர் : எஸ்.செல்வராஜ், 77/5, வடக்கு தெரு, சேர்ந்தமரம்-627 857.


**சேர்ந்த மரம் தெற்கு கிளை :**
பொறுப்பாளர் : கே.ஜெயராஜ், 82ஏ/1, கீழத் தெரு சேர்ந்தமரம்-627 857

**" அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் : 28.06.2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ந.உ. சிவசாமி
### ஜூன் 29 (2023)



**இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**மாவட்டப் பிரதிநிதியாகவும் – முப்பது ஆண்டுகள் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் – பத்தாண்டுகள் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து முத்துப்பேட்டை பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர், மாவட்ட வேளாண்மை விற்பனை குழு உறுப்பினர், பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர், எடையூர் சங்கந்தி கூட்டுறவு சங்க தலைவர் என பல்வேறு அமைப்புகளில் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**